**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI.**

**(CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)**

**C.C. No: 79/2023**

**Dated: 12.03.2026**

**Deposition of Witnesses for PW -1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **திரு.கண்ணன்** | வயது | : | |
| தகப்பனார் பெயர் | : | | தாலுகா | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed by Tmt.Deepika,Translator of this court in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023

**1, 2 எதிரிகள் ஆஜர். இரு தரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

**As per the circular of the Hon'ble High Court,Madras in ROC.NO.74663/2024/F1-dt.21.02.2025 the identity of the witness verified with their identity card. Aathar card of the Witness verified.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது இராமநாதபுரம் கேணிக்கரை காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.இதற்கு முன்பு ராமநாதபுரம் போதைப் பொருள் நுண்ணறிவு பிரிவில் பணிபுரிந்தபோது 27.05.2022-ம் தேதி 14.15 மணிக்கு நான் அலுவலில் இருந்தபோது காவல் ஆய்வாளர் ஜாக்குலின் அவர்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி நானும், சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.பெரியகருப்பன் த.கா.1251 திரு.குமார் ஆகியோர்களுடன் காவல் ஆய்வாளருக்கு உதவியாக வழக்கிற்கு தேவையான ஆவணங்கள் மற்றும் உபகரணங்களை எடுத்து கொண்டு 14.30 மணிக்கு நிலையத்தை விட்டு கிளம்பி 14.50 மணிக்கு

தகவலாளி சொன்ன இ டமான ராமநாதபுரம் டி பிளாக் பால் அடைந்த கட்டிடம் அருகில் போதைப்பொருள் தடுப்பு சம்பந்தமாக கண்காணித்து கொண்டிருந்தபோது அங்கு இருசக்கர வாகனத்தில் வந்த நபர்களை தகவலாளி அடையாளம் காட்டி மறைய நாங்கள் அவரை பிடிக்க முயலும்போது இருசக்கரத்தை நிறுத்தி விட்டு ஓட எத்தணித்தவரை சுற்றி வளைத்து பிடித்து நாங்கள் NIB CID போலீசார் என அடையாளம் காண்பித்து அறிமுகம் செய்து கொண்டோம். பின்பு அவரது பெயர் முகவரி கேட்க அதில் முதல் நபர் தனது பெயர் கண்ணன், வயது.45/22, த/பெ.ராஜேந்திரன் ஓம் சக்தி நகர், ராமநாதபுரம் என்று கூறினார். மற்றொரு நபர் முத்து முருகன், வயது.30/22, த/பெ.முனியசாமி, எம்எஸ் கே நகர், ராமநாதபுரம் என்று கூறினார். தகவலாளி சொன்ன முகவரி சரியாக இருந்ததால் 15.00 மணிக்கு மேற்படி இரண்டு நபர்களிடமும் அவர்கள் கஞ்சா வைத்திருப்பதாக ஆய்வாளர் அவர்களிடம் எடுத்து கூறியும் அவர்களை சோதனை செய்ய வேண்டி அது வகைக்கு அவர்களை அருகிலுள்ள நீதித்துறை நடுவர் முன்பாகவோ அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரி முன்போ அழைத்து சென்று சோதனை செய்ய எதிரிகளுக்கு உள்ள உரிமையை ஆய்வாளர் அவர்களிடம் எடுத்து கூறினார். அதற்கு அவர்கள் தாங்களே சோதனை செய்யலாம் என்றும் தங்களை வேறு எங்கும் கூட்டி செல்ல வேண்டாம் என்றும் கூறினார்கள். அதன்படி 15.10 மணிக்கு காவல் ஆய்வாளர் திரு. கண்ணன் என்பவருக்கு சோதனை சம்மத

கடிதம் தயார் செய்து சார்பு செய்தார். அதற்கு தனிநபர் சாட்சிகள் யாரும் அங்கு இல்லை என்பதால் நானும் சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.பெரிய கருப்பனும், த.கா.குமாரும் கைது செய்துள்ளோம். 1-வது எதிரிக்கு சார்பு செய்த சோதனை சம்மத கடிதம் என்னிடத்தில் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் சோதனை சம்மத கடிதம் ஆகும். அதில் உள்ள 2-வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான்.அந்த **சோதனை சம்மத கடிதம் அதசாஆ.**1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன்படி 15.30 மணிக்கு காவல் ஆய்வாளர் திரு. கண்ணன் என்பவருக்கு சோதனை சம்மத கடிதம் தயார் செய்து சார்பு செய்தார். அதற்கு தனிநபர் சாட்சிகள் யாரும் அங்கு இல்லை என்பதால் நானும் சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.பெரிய கருப்பனும், த.கா.குமாரும் கைது செய்துள்ளோம். 2-வது எதிரிக்கு சார்பு செய்த சோதனை சம்மத கடிதம் என்னிடத்தில் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் சோதனை சம்மத கடிதம் ஆகும். அதில் உள்ள 2-வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த **சோதனை சம்மத கடிதம் அதசாஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு 15.30 மணிக்கு திரு.கண்ணன் என்பவர் டி பிளாக் பாழ்அடைந்த கட்டிடத்திலிருந்து கொண்டு வந்த வெள்ளை நிற சாக்கு பையை ஆஜர் படுத்தினார். அதில் நாங்கள் கொண்டு சென்ற தராசில் எடை போட்டு பார்த்தபோது அதில் 2.100 கிகி கஞ்சா இருந்தது. அதை 15.40 மணிக்கு அத்தாட்சி தயார் செய்து அத்தாட்சியில் காவல் ஆய்வாளர் அவர்கள் கஞ்சாவை

கைப்பற்றி அதில் தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் நானும் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.பெரியகருப்பன், த.கா.குமாரும் கையொப்பம் செய்தோம். 1-வது எதிரிக்கு தயார் செய்த அத்தாட்சி ஆகும். அந்த **அத்தாட்சி அதசாஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2-வது எதிரிக்கு தயார் செய்த அத்தாட்சி ஆகும். அந்த **அத்தாட்சி அதசாஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரியை ஆஜர்படுத்திய கஞ்சாவிலிருந்து பகுப்பாய்விற்கு 50கி வீதம் இரண்டு சாம்பில் எடுத்து அதில் SHO சீல் வைத்தும், மீதமுள்ள கஞ்சாவை அதே பையில் வைத்து பின்பு 16.30 மணி முதல் 16.50 மணி வரை 1-வது எதிரி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் நானும் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.பெரியகருப்பனும், த.கா.குமாரும் கையெழுத்து செய்தோம். தற்போது என்னிடத்தில் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 2-வது கையொப்பம் என்னுடையது தான்.அந்த **ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 2-வது கையெழுத்து மட்டும அதசாஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு 17.00 மணிக்கு 2-வது எதிரியை ஆஜர் படுத்திய கஞ்சாவை நாங்கள் கொண்டு சென்ற தராசில் எடை போட்டு பார்த்தபோது 1.200கிகி கஞ்சா இருந்தது. அதற்கு P2என குறியீடு செய்யப்பட்டு எதிரிகள் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தையும் கஞ்சாவையும் அத்தாட்சியில் கைப்பற்றி பின்பு 15.30 மணிக்கு எதிரிகளுக்கு

ஆய்வு நமுனா தயார் செய்து அதில் தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் நானும் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.பெரியகருப்பன் மற்றும் த.கா.குமாரும் கையொப்பம் செய்தோம். 1-வது எதிரி கண்ணனுக்கு அந்த **ஆய்வு நமுனா அதசாஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2-வது எதிரி முத்துமுருகனுக்கு ஆய்வு செய்த அந்த **ஆய்வு நமுனா அதசாஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு எதிரிகள் மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்ய காவல் ஆய்வாளருக்கு நாங்கள் உதவியாக இருந்தோம்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

ஆய்வாளர் என்னை எங்கு வைத்து விசாரித்தார் என்றால் சம்பவ இடத்தில் வைத்து அதே தேதியில் விசாரித்தார். நான் முதல் விசாரணை சாட்சியத்தில் சொன்ன சங்கதிகளை தான் என்னை ஆய்வாளர் விசாரணை செய்தபோதும் வாக்குமூலமாக அளித்தேன் அவர் அதை பதிவு செய்து கொண்டார். நாங்கள் அன்றைய தினம் மடிக்கணிணி கொண்டு செல்லவில்லை. ஆய்வு நமுனா, கைது அறிக்கை, ஒப்புதல் வாக்குமூலம், அத்தாட்சி ஆகியவைகள் கையால் எழுதப்பட்டதா அல்லது கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டதா என்றால் நாங்கள் படிவம் கொண்டு சென்றோம். ஆய்வாளர் விசாரணை செய்தபோது மற்றும் முதல் விசாரணை மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றை இருசக்கர வாகனத்தை யார் ஓட்டி வந்தார்கள் என்ற விவரத்தினை சொல்லவில்லை என்றால் சரிதான்.

மேற்படி ஆவணங்களை ஆய்வாளர் தான் எழுதினார் என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களை நானோ, சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.பெரிய கருப்பனோ த.கா.குமாரோ எழுதவில்லை. இவ்வழக்கில் இரண்டு அத்தாட்சிகள் தயாரிக்கப்பட்டது. மேற்படி அத்தாட்சிகள் தமிழில் கையால் எழுதப்பட்டது. இவ்வழக்கில் வேறு அத்தாட்சிகள் எதுவும் தயாரிக்கப்பட்டதா என்றால் எனக்கு அதுபற்றி ஞாபகம் இல்லை. இவ்வழக்கு சம்பந்தமாக காவல் நிலையத்தில் வைத்து ஆவணங்களில் கையெழுத்து செய்தேனா என்றால் எந்த கையொப்பமும் செய்யவில்லை. தனிநபர்களை அழைத்தும் வரவில்லை என்ற விவரத்தினை ஆவணங்களில் சொல்லியுள்ளோமா என்றால் சோதனை சம்மத கடிதத்தில் சொல்லியுள்ளோம். என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் அதசாஆ.1 மற்றும் 2 சோதனை சம்மத கடிதங்களில் அவ்வாறு வாசகம் உள்ளதா என்றால் இல்லை. அத்தாட்சியில் பகுப்பாய்வுக்கு மாதிரிகள் எடுக்கப்பட்ட விவரங்கள் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அன்றையதினம் ரைடிற்கு ஆய்வாளரின் முத்திரைகள் எதுவும் கொண்டு சென்றோமா என்றால் அதுபற்றி எனக்கு ஞாபகம் இல்லை. ஆவணங்களில் ஆய்வாளரின் சீல் எதுவும் வைத்தார்களா என்றால் அதுபற்றி எனக்கு ஞாபகம் இல்லை. என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் ஆங்கிலத்தில் உள்ள சீசர் மகஜரில் எங்கு வைத்து இந்த ஆவணம் தயாரிக்கப்பட்டது என்றும், நான் கையொப்பம் எங்கே வைத்து செய்தேன் என்ற விவரத்தினை ஆய்வாளர்

விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். சீசர் மகஜரிலுள்ள 2-வது கையெழுத்து என்னுடையது தான். Witness No 2 என்பது என்னுடையது கையெழுத்து தான். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் சம்பவ எதுவும் நடைபெறவில்லை என்றும் அனைத்து ஆவணங்களும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து எதிரிகள் மீது பொய் வழக்கு போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. வீட்டிலிருந்த எதிரிகளை இருசக்கர வாகனத்தில் அழைத்து சென்று காவல் நிலையத்தில் அனைத்து ஆவணங்களையும் தயார் செய்து அதற்கு ஆதரவாக மேலதிகாரி கேட்டு கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் கஞ்சாவிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் எந்த ஒரு ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. இருசக்கர வாகனத்திற்கும் வழக்கிற்கும் எந்த தொடர்பும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. நான் உண்மையை மறைத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாணை:-</u>**

இல்லை.

திறந்த நீதிமனறத்தில் சாட்சி மற்றம் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் கட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது .

அத்தியாவசிய பண்டங்கள் மற்றும் போதைப் பொருள் தடுப்பு சிறப்பு நீதிமன்றம்,

புதுக்கோட்டை.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI.**
**(CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)**

**C.C. No: 79/2023**

**Dated: 12.03.2026**

**Deposition of Witnesses for PW -2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **திரு.பெரிய கருப்பன்** | வயது | : | |
| தகப்பனார் பெயர் | : | | தாலுகா | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed by Tmt.Deepika,Translator of this court in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023

**1, 2 எதிரிகள் ஆஜர். இரு தரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

**As per the circular of the Hon'ble High Court,Madras in ROC.NO.74663/2024/F1-dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.**

**Aathar card of the Witness verified.**

**முதல் விசாரணை**

நான் தற்போது இராமநாதபுரம் NIB CID காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து

வருகிறேன். ராமநாதபுரம் போதைப் பொருள் நுண்ணறிவு பிரிவில் பணிபுரிந்தபோது 27.05.2022-ம் தேதி 14.15 மணிக்கு நான் அலுவலில் இருந்தபோது காவல் ஆய்வாளர் ஜாக்குலின் அவர்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி நானும், சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.கண்ணன் த.கா.1251 திரு.குமார் ஆகியோர்களுடன் காவல் ஆய்வாளருக்கு உதவியாக வழக்கிற்கு தேவையான ஆவணங்கள் மற்றும் உபகரணங்களை எடுத்து கொண்டு 14.30 மணிக்கு நிலையத்தை விட்டு கிளம்பி 14.50 மணிக்கு தகவலாளி சொன்ன இ டமான ராமநாதபுரம் டி பிளாக் பால் அடைந்த கட்டிடம் அருகில் போதைப்பொருள் தடுப்பு சம்பந்தமாக கண்காணித்து கொண்டிருந்தபோது அங்கு இருசக்கர வாகனத்தில் வந்த நபர்களை தகவலாளி அடையாளம் காட்டி மறைய நாங்கள் அவரை பிடிக்க முயலும்போது இருசக்கரத்தை நிறுத்தி விட்டு ஓட எத்தணித்தவரை சுற்றி வளைத்து பிடித்து நாங்கள் NIB CID போலீசார் என அடையாளம் காண்பித்து அறிமுகம் செய்து கொண்டோம். பின்பு அவரது பெயர் முகவரி கேட்க அதில் முதல் நபர் தனது பெயர் கண்ணன், வயது.45/22, த/பெ.ராஜேந்திரன் ஓம் சக்தி நகர், ராமநாதபுரம் என்று கூறினார். மற்றொரு நபர் முத்து முருகன், வயது.30/22, த/பெ.முனியசாமி, எம்எஸ் கே நகர், ராமநாதபுரம் என்று கூறினார். தகவலாளி சொன்ன முகவரி சரியாக இருந்ததால் 15.00 மணிக்கு மேற்படி இரண்டு நபர்களிடமும் அவர்கள் கஞ்சா வைத்திருப்பதாக ஆய்வாளர் அவர்களிடம் எடுத்து கூறியும் அவர்களை சோதனை செய்ய

வேண்டி அது வகைக்கு அவர்களை அருகிலுள்ள நீதித்துறை நடுவர் முன்பாகவோ அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரி முன்போ அழைத்து சென்று சோதனை செய்ய எதிரிகளுக்கு உள்ள உரிமையை ஆய்வாளர் அவர்களிடம் எடுத்து கூறினார். அதற்கு அவர்கள் தாங்களே சோதனை செய்யலாம் என்றும் தங்களை வேறு எங்கும் கூட்டி செல்ல வேண்டாம் என்றும் கூறினார்கள். அதன்படி 15.10 மணிக்கு காவல் ஆய்வாளர், கண்ணன் என்பவருக்கு சோதனை சம்மத கடிதம் தயார் செய்து சார்பு செய்தார். அதற்கு தனிநபர் சாட்சிகள் யாரும் அங்கு இல்லை என்பதால் நானும் சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.கண்ணன், த.கா.குமாரும் கைது செய்துள்ளோம். 1-வது எதிரிக்கு சார்பு செய்த சோதனை சம்மத கடிதம் என்னிடத்தில் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் சோதனை சம்மத கடிதம் ஆகும். அதில் உள்ள 1-வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த **சோதனை சம்மத கடிதம் அதசாஆ.**1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி 15.30 மணிக்கு காவல் ஆய்வாளர், கண்ணன் என்பவருக்கு சோதனை சம்மத கடிதம் தயார் செய்து சார்பு செய்தார். அதற்கு தனிநபர் சாட்சிகள் யாரும் அங்கு இல்லை என்பதால் நானும் சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.கண்ணன், த.கா.குமாரும் கைது செய்துள்ளோம். 2-வது எதிரிக்கு சார்பு செய்த சோதனை சம்மத கடிதம் என்னிடத்தில் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் சோதனை சம்மத கடிதம் ஆகும். அதில் உள்ள 1-வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த

**சோதனை சம்மத கடிதம் அதசாஆ.2** ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்பு 15.30 மணிக்கு திரு.கண்ணன் என்பவர் டி பிளாக் பாழ்அடைந்த கட்டிடத்திலிருந்து கொண்டு வந்த வெள்ளை நிற சாக்கு பையை ஆஜர் படுத்தினார். அதில் நாங்கள் கொண்டு சென்ற தராசில் எடை போட்டு பார்த்தபோது அதில் 2.100 கிகி கஞ்சா இருந்தது. அதை 15.40 மணிக்கு அத்தாட்சி தயார் செய்து அத்தாட்சியில் காவல் ஆய்வாளர் அவர்கள் கஞ்சாவை கைப்பற்றி அதில் தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் நானும் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.பெரியகருப்பன், த.கா.குமாரும் கையொப்பம் செய்தோம். 1-வது எதிரிக்கு தயார் செய்த அத்தாட்சி ஆகும். அந்த **அத்தாட்சி அதசாஆ.3** ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. 2-வது எதிரிக்கு தயார் செய்த அத்தாட்சி ஆகும். அந்த **அத்தாட்சி அதசாஆ.4** ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி ஆஜர்படுத்திய கஞ்சாவிலிருந்து பகுப்பாய்விற்கு 50கி வீதம் இரண்டு சாம்பில் எடுத்து அதில் SHO சீல் வைத்தும், மீதமுள்ள கஞ்சாவை அதே பையில் வைத்து பின்பு 16.30 மணி முதல் 16.50 மணி வரை 1-வது எதிரி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் நானும் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.கண்ணன், த.கா.குமாரும் கையெழுத்து செய்தோம். தற்போது என்னிடத்தில் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 1-வது கையொப்பம் என்னுடையது

தான்.அந்த **ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 1-வது கையெழுத்து மட்டும் அதசாஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு 17.00 மணிக்கு 2-வது எதிரியை ஆஜர் படுத்திய கஞ்சாவை நாங்கள் கொண்டு சென்ற தராசில் எடை போட்டு பார்த்தபோது 1.200கிகி கஞ்சா இருந்தது. அதற்கு P2என குறியீடு செய்யப்பட்டு எதிரிகள் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தையும் கஞ்சாவையும் அத்தாட்சியில் கைப்பற்றி பின்பு 15.30 மணிக்கு எதிரிகளுக்கு ஆய்வு நமுனா தயார் செய்து அதில் தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் நானும் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.கண்ணன் மற்றும் த.கா.குமாரும் கையொப்பம் செய்தோம். 1-வது எதிரி கண்ணனுக்கு அந்த **ஆய்வு நமுனா அதசாஆ.6** ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. 2-வது எதிரி முத்துமுருகனுக்கு ஆய்வு செய்த அந்த **ஆய்வு நமுனா அதசாஆ.7** ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்பு எதிரிகள் மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்ய காவல் ஆய்வாளருக்கு நாங்கள் உதவியாக இருந்தோம்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

ஆய்வாளர் என்னை எங்கு வைத்து விசாரித்தார் என்றால் சம்பவ இடத்தில் வைத்து அதே தேதியில் விசாரித்தார். நான் முதல் விசாரணை சாட்சியத்தில் சொன்ன சங்கதிகளை தான் என்னை ஆய்வாளர் விசாரணை செய்தபோதும் வாக்குமூலமாக அளித்தேன் அவர் அதை

பதிவு செய்து கொண்டார். நாங்கள் அன்றைய தினம் மடிக்கணிணி கொண்டு செல்லவில்லை. ஆய்வு நமுனா, கைது அறிக்கை, ஒப்புதல் வாக்குமூலம், அத்தாட்சி ஆகியவைகள் கையால் எழுதப்பட்டதா அல்லது கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டதா என்றால் நாங்கள் படிவம் கொண்டு சென்றோம். ஆய்வாளர் விசாரணை செய்தபோது மற்றும் முதல் விசாரணை மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றை இருசக்கர வாகனத்தை யார் ஓட்டி வந்தார்கள் என்ற விவரத்தினை சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களை ஆய்வாளர் தான் எழுதினார் என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களை நானோ, சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.கண்ணனோ த.கா.குமாரோ எழுதவில்லை. இவ்வழக்கில் இரண்டு அத்தாட்சிகள் தயாரிக்கப்பட்டது. மேற்படி அத்தாட்சிகள் தமிழில் கையால் எழுதப்பட்டது. இவ்வழக்கில் வேறு அத்தாட்சிகள் எதுவும் தயாரிக்கப்பட்டதா என்றால் எனக்கு அதுபற்றி ஞாபகம் இல்லை. இவ்வழக்கு சம்பந்தமாக காவல் நிலையத்தில் வைத்து ஆவணங்களில் கையெழுத்து செய்தேனா என்றால் எந்த கையொப்பமும் செய்யவில்லை. தனிநபர்களை அழைத்தும் வரவில்லை என்ற விவரத்தினை ஆவணங்களில் சொல்லியுள்ளோமா என்றால் சோதனை சம்மத கடிதத்தில் சொல்லியுள்ளோம். என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் அதசாஆ.1 மற்றும் 2 சோதனை சம்மத கடிதங்களில் அவ்வாறு வாசகம் உள்ளதா என்றால் இல்லை. அத்தாட்சியில் பகுப்பாய்வுக்கு மாதிரிகள் எடுக்கப்பட்ட

விவரங்கள் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அன்றையதினம் ரைடிற்கு ஆய்வாளரின் முத்திரைகள் எதுவும் கொண்டு சென்றோமா என்றால் அதுபற்றி எனக்கு ஞாபகம் இல்லை. ஆவணங்களில் ஆய்வாளரின் சீல் எதுவும் வைத்தார்களா என்றால் அதுபற்றி எனக்கு ஞாபகம் இல்லை. என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் ஆங்கிலத்தில் உள்ள சீசர் மகஜரில் எங்கு வைத்து இந்த ஆவணம் தயாரிக்கப்பட்டது என்றும், நான் கையொப்பம் எங்கே வைத்து செய்தேன் என்ற விவரத்தினை ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். சீசர் மகஜரிலுள்ள 2-வது கையெழுத்து என்னுடையது தான். Witness No 2 என்பது என்னுடையது கையெழுத்து தான். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் சம்பவ எதுவும் நடைபெறவில்லை என்றும் அனைத்து ஆவணங்களும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து எதிரிகள் மீது பொய் வழக்கு போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. வீட்டிலிருந்த எதிரிகளை இருசக்கர வாகனத்தில் அழைத்து சென்று காவல் நிலையத்தில் அனைத்து ஆவணங்களையும் தயார் செய்து அதற்கு ஆதரவாக மேலதிகாரி கேட்டு கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் கஞ்சாவிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் எந்த ஒரு ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. இருசக்கர வாகனத்திற்கும்

வழக்கிற்கும் எந்த தொடர்பும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. நான் உண்மையை மறைத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை:-**

இல்லை.

திறந்த நீதிமனறத்தில் சாட்சி மற்றம் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் கட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது .

அத்தியாவசிய பண்டங்கள் மற்றும் போதைப் பொருள் தடுப்பு சிறப்பு நீதிமன்றம்,

புதுக்கோட்டை.